# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை, (டிட்கோ வளாகம்), எழும்பூர், சென்னை 600 008.
தொலைபேசி .28411376, 28411378, 28411379 / தொலை நகல் : 28411377
email: tnerc@vsnl.net Website: www.tnerc.tn.nic.in

## செய்திக்குறிப்பு

செய்தி குறிப்பு எண். 02 / 2009
25–02–2009

பொருள் – மரபுசார எரிசக்தி ஆதாரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் கொள்முதலுக்கான மின் கட்டணவீதம் பற்றியக் கருத்துக்கேட்பு

காற்று, உயிர்க்கூளம், கரும்புச்சக்கை மூலமான மின் உற்பத்தியாளர்களிடமிருந்து மின் பகிர்வு உரிமம்தாரரால் செய்யப்படும் மின் கொள்முதலுக்கான மின் கட்டணவீதம் நிர்ணயித்தல் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள் பொறுத்து பிற்பகல் 2.00 மணி முதல் 7.30 மணி வரை சென்னை 600 018 ஆழ்வார்பேட்டை, எண். 314, டி.டி.கே. சாலையில் உள்ள நாரத கான சபாவின் சிறிய கூடத்தில்(Mini Hall) 2009 மார்ச் 5ஆம் நாளன்று பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்த ஆணையம் உத்தேசித்துள்ளது.

பின்வருவன மின் கட்டணவீதத்தினை முடிவு செய்தவற்காக பல்வேறு கூறுகளின்படி குறிப்புரைக்கப்பட்ட அளவுருகள் (Parameters).

**மூலதனச்செலவு** (Capital Cost)

(i) காற்றாலை மின் உற்பத்தியாளருக்கு – ரூ.5.35 கோடிகள்/ மெகாவாட் (mw)

(ii) உயிர்க்கூளம்(Bio mass) ரூ.5.10 கோடிகள் / மெகாவாட் (mw)

(iii) கரும்புச்சக்கை(Bagasse) மூலமான இணை மின் உற்பத்தி (Co-generation) – ரூ.4.96 கோடிகள் / மெகாவாட் (mw)

**திறன் பயன்பாட்டுக்காரணி** (Capacity utilization Factor)

நிலையத்தின் சுமைக்காரணி –(Plant Load Factor)

(i) காற்றாலை மின் உற்பத்தியாளர் – 27.15 விழுக்காடு

(ii) உயிர்க்கூளம் – 80 விழுக்காடு, மற்றும்

(iii) கரும்புச் சக்கை மூலமான இணை மின் உற்பத்தி 55 விழுக்காடு

<u>தேய்மானம்</u> (Depreciation)

(i) காற்றாலை மின் உற்பத்தியாளர் 4.50 விழுக்காடு

(ii) உயிர்க்கூளம் மற்றும் கரும்புச்சக்கை மூலமான இணை மின் உற்பத்தி – 7.84 விழுக்காடு.

<u>இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகள்</u>

(i) காற்றாலை மின் உற்பத்தியாளர் ஒவ்வோர் ஆண்டின் மூலதனச் செலவில் ஏற்ற இறக்கம் 5 விழுக்காட்டுடன் 1.10 விழுக்காடு.

(ii) உயிர்க்கூளம் மற்றும் கரும்புச் சக்கை மூலமான இணை மின் உற்பத்தி – ஒவ்வோர் ஆண்டின் ஏற்ற இறக்கம் 5 விழுக்காட்டுடன் 4.5 விழுக்காடு.

<u>காப்பீடு</u> – (Insurance)

(i) காற்றாலை மின் உற்பத்தியாளர் – முதல் ஐந்தாண்டுகளுக்கான மூலதனச்செலவு 0.75 விழுக்காடு மற்றும் அதன் பின்பு ஒவ்வோர் ஆண்டும் குறைப்பு 0.50 விழுக்காடு.

(ii) உயிர்க்கூளம் மற்றும் கரும்புச் சக்கை மூலமான இணை மின் உற்பத்தி – முதல் ஐந்தாண்டுகளுக்கான மூலதனச்செலவு 0.75 விழுக்காடு மற்றும் அதன் பின்பு ஒவ்வோரு ஆண்டுக்கான குறைப்பு 0.50 விழுக்காடு.

கடன் மற்றும் பங்கு விகிதம் – 70 : 30

கடனின் காலஅளவு ஓர் ஆண்டு கடன் தவணையுரிமைக்காலத்துடன்10 ஆண்டுகள்.

கடனுக்கான வட்டி – 12 விழுக்காடு.

கடன் பங்கினைத் திருப்பிச் செலுத்தல் – 17.63 விழுக்காடு வரிக்கு முன்பு.

மேலே குறிப்புரைக்கப்பட்ட வழக்கமான அளவுருக்களின் அடிப்படையில், மின் கொள்முதலுக்கான மின் கட்டணவீதம் – (i) காற்றாலை மின் உற்பத்தியாளருக்கு – யூனிட் ஒன்றுக்கு ரூ.3.40 /–

(ii) உயிர்க்கூளம் மூலமான மின் உற்பத்தியாளருக்கு – முதலாம் ஆண்டு முதல் மூன்றாம் ஆண்டுவரை யூனிட் ஒன்றுக்கு ரூ.4.660 முதல் ரூ.4.866, மற்றும்,

(iii) கரும்புக் சக்கை மூலமான இணை மின் உற்பத்திக்கு – முதலாம் ஆண்டு முதல் மூன்றாம் ஆண்டு வரை யூனிட் ஒன்றுக்கு ரூ.4.802 முதல் ரூ.4.493 வரை.

ஆர்வமுடையவர்கள் ஆணையத்தின் இணைய தளம் www.tnerc.gov.in –லிருந்து கலந்தாய்வு தொடர்பான ஆவணங்களைப் பெறலாம். ஆணையத்தின் அலுவலகத்தில் அந்த ஆவணத்தின் நகல் ஒன்றுக்கு ரூ.50/– ரொக்கமாகவோ அல்லது செயலாளர் / தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்ற பெயரிலான கேட்பு வரைவோலை மூலமாகவோ செலுத்தியும் இதன் நகல்கள் பெற்றுக்கொள்ளப்படலாம்.

ஆர்வமுடையவர்கள், ஆணையத்தின் முன்பு ஆஜராகலாம் மற்றும் தங்களுடைய கருத்துக்களை கருத்துக்கேட்பின்போது தாக்கல் செய்யலாம். ஆர்வமுடையவர்கள் 05–03–2009 அன்று பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 வரை தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்